


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.5.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் சென்னை வெளிவட்ட சாலையில் உள்ள மீஞ்சூர், வெள்ளனூர், வரதராஜபுரம், திருநாகேஸ்வரத்தில் 11.46 கோடி ரூபாய் செலவில் 4 உடற்பயிற்சி பூங்காக்கள் மற்றும் 3.20 கோடி ரூபாய் செலவில் தியாகராய நகரில் சோமசுந்தரம் விளையாட்டு மைதானம் ஆகியவற்றை திறந்து வைத்து, 255.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.5.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 207 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 வணிக வளாகங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா வாரிய இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.5.2025) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வால்டாக்ஸ்சாலையில்உள்ளகால்வாயில்ஆகாயத்தாமரையை அகற்றும்பணியைபார்வையிட்டுஆய்வுசெய்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., தாயகம் கவி எம்.எல்.ஏ., , மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், துணை ஆணையர் (பணிகள்) வ. சிவகிருஷ்ணமூர்த்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (20.5.2025) தலைமைச் செயலகத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயசந்திரன், உள்பட கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சமத்துவத்தை வலியுறுத்திய

# அயோத்திதாசப் பண்டிதரின் கருத்துக்கள் வலுக்கட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, மே 22-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அயோத்திதாசப் பண்டிதரின் பிறந்த நாளையொட்டி, தமது சமூக வலைதளப் பக்கத்தில், அவரது கருத்துக்கள் வலுக்கட்டும், ஆதிக்கம் அழியட்டும் என்று பதிவிட்டுள்ளார்.



அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**மே 20: பண்டிதர் அயோத்திதாசர் பிறந்தநாள்: சென்னையில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம்,**

**ஆதிதிராவிட மக்களுக்காக 1000 கோடி ரூபாயில் நாம் செயல்படுத்தி வரும் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்துக்குப் பண்டிதரின் பெயர் எனத் 'திராவிடப் பேரொளி' அயோத்திதாசரைப் போற்றி வருகிறது நமது திராவிட மாடல் அரசு!**

**சமத்துவத்தை வலியுறுத்திய அவரது கருத்துகள் வலுக்கட்டும்! ஆதிக்கம் அழியட்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### மாநில அவசர கால செயல்பாட்டு மையத்தில்

# தென்மேற்குப் பருவமழை: தயார் நிலை குறித்து ஆய்வு!

## வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மேற்கொண்டார்!

*சென்னை, மே 22-*

சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் அவர்கள் ஆய்வு செய்தார்.


வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (20.05.2025) சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் வந்து, தென்மேற்குப் பருவமழை தயார்நிலை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

19.05.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தென்மேற்கு பருவமழை ஆய்த்த நிலை மற்றும் மேட்டூர் அணையிலிருந்து நீர் திறப்பு குறித்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை தவறாது பின்பற்றவும் அறிவுரை வழங்கினார்.

தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்பகுதிகளிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் நேற்று பெய்த மழை காரணமாக கே ஆர் பி நீர்த்தேக்கம் மற்றும் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் இருந்து தென்பெண்ணை ஆற்றில் 4,200 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் தர்மபுரி மாவட்ட ஆட்சியர் ஆகியோர் மேற்கொண்டுள்ள முன்னேற்பாடுகள் குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் அவர்கள் காணொளி காட்சி மூலம் கேட்டு அறிந்தார்கள்.

மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தின் 24 மணி நேரமும் இயங்கி வரும் அவசர அழைப்பு மையத்தில், பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் புகார்கள் மீது எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைக் கேட்டறிந்த அமைச்சர் அவர்கள், புகார்களுக்கு உடனடியாக தீர்வு கண்டு, புகார் அளித்தவர்களுக்கு எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கை குறித்து தகவல் தெரிவிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் ஆய்வின் போது, எம்.சாய் குமார், கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், திருமதி பெ.அமுதா, அரசு கூடுதல் தலைமைச் செயலர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, திருமதி சிஜி தாமஸ் வைத்தியன், ஆணையர், பேரிடர் மேலாண்மை. கே.எஸ்.பழனிச்சாமி, நில நிர்வாக ஆணையர் டி.என். ஹரிஹரன், நில சீர்திருத்த ஆணையர், ச.நடராஜன், கூடுதல் வருவாய் நிர்வாக ஆணையர் மதுசூதனன் ரெட்டி, நில அளவை மற்றும் நிலவரி திட்ட ஆணையர் அ.சங்கர், நில சீர்திருத்த இயக்குனர் உள்ளிட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசர கால செயல்பாட்டு மையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தென்மேற்கு பருவமழை ஆயத்தப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின்போது கூடுதல் தலைமைச் செயலாளர் வருவாய் நிருவாக ஆணையர் முனைவர். எம். சாய் குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, பேரிடர் மேலாண்மை ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்தியன், நில நிர்வாக ஆணையர் டாக்டர். கே. எஸ். பழனிசாமி, நில சீர்திருத்த ஆணையர் டி.என். ஹரிஹரன், கூடுதல் வருவாய் நிர்வாக ஆணையர் ச.நடராஜன், நில அளவை மற்றும் நிலவரி திட்ட இயக்குநர் மதுசூதனன் ரெட்டி, நில சீர்திருத்த இயக்குநர் அ.சங்கர். கர், மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

# வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவர உயர்அலுவலர்களுக்கு – துணை முதல்வர் அறிவுரை!

**சென்னை, மே 22–**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு அனைத்து மாவட்டங்களிலும் சமமான வளர்ச்சி என்ற அடிப்படையில் சாலைகள், பாலங்கள், வளர்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருகின்றது.

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை உலக அளவில் முக்கியத்துவம் பெற்ற நகரமாக தொடர்ந்து வேகமாக முன்னேறி வருகின்றது. சென்னையின் அனைத்துப் பகுதிகளிலும் சீரான வளர்ச்சியடைவதற்காக முதலமைச்சர் அவர்கள் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றார்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 238 பணிகள் 6,876.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.5.2025) தலைமைச் செயலகத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து பல்வேறு அரசுத் துறை உயர் அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டார்.

**பல அடுக்கு வாகன நிறுத்துமிடம்!**

வட சென்னை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 822.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன பல அடுக்கு வாகன நிறுத்துமிடத்துடன் கூடிய பிராட்வே பேருந்துநிலையம் உட்பட பேருந்து நிலையங்களின் மேம்பாட்டு பணிகள், சாலை மேம்பாட்டுப் பணிகள், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், 53.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவ நிறுவனத்தில் புதிய சூப்பர் ஸ்பெசாலிட்டி பிரிவு கட்டடம் கட்டும் பணி உட்பட ஆய்வகங்களுடன் கூடிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள், மகப்பேறு மருத்துவமனைக் கட்டடங்கள், பள்ளிக்கூடக் கட்டடங்கள், பூங்காக்கள், 7.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொளத்தூரில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைத்தல் உட்பட உள்ளரங்க விளையாட்டு மைதானங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**குடிநீர் விநியோகக் கட்டமைப்பு!**

மேலும் குடிநீர் விநியோக கட்டமைப்பினை மேம்படுத்தும் பணிகள், கழிவுநீர் அகற்றும் கட்டமைப்புகளைச் சீரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள், நூலகக் கட்டடங்கள், சமுதாயக்கூடங்கள், கடற்கரைகளை அழகுபடுத்தி மேம்படுத்தும் பணிகள், ஏரிகளை மேம்படுத்துதல், மீன் அங்காடிகள், நவீன காய்கறி விற்பனைக் கூடங்கள் கட்டுதல், நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள், புதிய மின்மாற்றிகள் அமைத்தல், துணை மின் நிலையங்கள் அமைத்தல் உட்பட மின் விநியோக சீரமைப்பு பணிகள், அதிநவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணிகள் உள்ளிட்ட 238 பணிகள் 6,876.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்ற முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இவற்றில், இதுவரை 8 இடங்களில் LPG மூலம் இயங்கக்கூடிய எரிவாயு மயானங்கள் அமைத்தல், 7 இடங்களில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், மறுசீரமைக்கப்பட்ட 3 பூங்காக்கள், மழைநீர் உறிஞ்சும் 2 (ஸ்பான்ச்) பூங்காக்கள், ஏரி குளங்கள் சீரமைத்து அழகுபடுத்தும் 6 பணிகள், வெள்ளநீர் தடுப்பு பணிகள் உள்ளிட்ட 774.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 47 பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் அவர்கள் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர, தொடர் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு அரசுத் துறை உயர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர்/ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், வீட்டு வசதி மற்றும் நகர்புர வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயசந்திரன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி.சந்தரமோகன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், உயர் கல்வித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் உள்பட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டையில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன் பணி நிறைவு பாராட்டு விழாவில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வாழ்த்துரையாற்றினார்கள். இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர், கவிதைப் பித்தன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.